Registered as News a Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 245

யாழ்ப்பாணம் புரட்டாதி 28 ஷஃபான் 23 வியாழக்கிழமை (14-10-71)

சிறுவர்களுக்கான
றெடிமேட் சேட்டுகள்
றெடிமேட் கவுண்கள்
மற்றும்
எல்லாவிதமான
ஜவுளி வகைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்
கணேசானந்தாஸ்
208, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
(முட்டாசுக்கடைச் சந்தி)

# 'இளைஞர் பிரச்னையை உலகம் நன்கு உணரவேண்டும்' - ஐ. நா. வில் பிரதமர் ஸ்ரீமா

## பயங்கரவாத இயக்கம் பற்றியும் பிரஸ்தாபம்; உதவியவர்களுக்கு நன்றி

நியூயோர்க், அக். 13

**உலக இளைஞர்கள் மத்தியில் அமைதியின்மை நிலவுகின்றது: அவர்களின் பிரச்னைகளை நாம் நன்கு புரிந்துகொள்ள முயற்சி செய்வதோடு அவர்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்கவும் முன்வர வேண்டும்.**

*இவ்வாறு இலங்கைப் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஐ. நா. பொதுச்சபையில் உரை நிகழ்த்துகையில் வேண்டுகோள் விடுத்தார்.*

இலங்கையில் சமீபகாலத்தில் ஏற்பட்ட பயங்கரவாதிகளின் தாக்குதல் பற்றியும் பிரதமமந்திரி குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு முற்பகுதியில் ஜனநாயகம் எமது நாட்டில் மிகப்பெரிய சோதனை யொன்றை எதிர்நோக்கியது. ஒருசிலர் சேர்ந்துகொண்டு வன்முறை மூலம் ஆட்சியைக் கவிழ்த்துவிடப் பார்த்தார்கள். எமது அரசியல் பாரம்பரியம் எமது வாழ்க்கைமுறை அரசியல் அமைப்பு ஆகியவை காரணமாகவும் நாட்டின் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் பெரும்பாலான இளைஞர்கள் ஆகியோரின் ஆதரவினாலும் எமது ஆட்சி காப்பாற்றப்பட்டது என்றார் பிரதமர்.

அவர் மேலும் பேசுகையில் ஆட்சிமன்ற ஜனநாயகத்தில் நாங்கள் நம்பிக்கையுள்ளவர்கள். அரசியல் சாஸனத்தின் அடிப்படையிலேயே தீர்க்கமான அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களைக்கொண்டுவர நாம் கன்முனைகிறோம் என்றார்.

சோதனையான சமயத்தில் உதவிக்கு வந்த எகிப்து மேற்கு கிழக்கு ஜெர்மனிகள், இந்தியா, பாகிஸ்தான் செகோஸ்லாவியா, அமெரிக்கா சோவியத் யூனியன் சீனு போன்ற நாடுகளுக்கு பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

### இந்து சமுத்திரம் பற்றிய பிரேரணை

இந்து சமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று பிரதம மந்திரி சபையில் வற்புறுத்தினார். வல்லரசுகளுக்கிடையில் 18ம் நூற்றாண்டில் இப் பிரதேசத்தில் ஏற்பட்ட ஆதிக்கப் போட்டி இப் பகுதியிலே அமைதியின்மையைத் தோற்றுவித்தது. அதே நிலைமை மீண்டும் தோன்றுவதை நாம் விரும்பவில்லை என்றார் பிரதமமந்திரி.

இந்துசமுத்திரப் பிரதேசத்தில் அணு ஆயுதங்களுக்கு இடமிருக்கக் கூடாதென்பது மட்டுமின்றி வல்லரசுகளின் தலங்களுக்கோ ஆதிக்கப் போட்டிகளுக்கோ இடமிருக்கக்கூடாது என்றார்.

இதனால் ஆசியாவிமட்டுமின்றி உலகுக்கே அமைதி யேற்படும் என்றார்.

மேற்காசிய தென்னுபிரிக்கா, வியட்நும், கிழக்கு வங்காளம் போன்ற இடங்களில் நிலவும் பிரச்னைகளையும் பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் பேசுகையில் உலகம் முழுவதும் கலவரமாகத் தோன்றுகிறது. நீதியும் அமைதியும் நிலைநாட்டப்படவேண்டும் என்றார்.

## சீனுவுக்கு உரிய இடம்

புதிதாக ஐ. நா. வில் அங்கத்துவம் பெறும் நாடுகள் பற்றி குறிப்பிட்டுஅவைகளை வரவேற்ற பிரதம மந்திரி, மகாசபையில் செஞ்சீனுவும் இடம் பெறுமாளுல் அதிக சிறப்பாகவிருக்கும் என்றார். செஞ்சீனுவுக்கு சட்டபூர்வமான இடம்கொடுக்கப்பட [illegible] அவர் தாய்வானை வெளி [illegible] ற பெற்றுவதி

பிரச்னைக்கே இடமில்லை ஏனெனில் சட்டப்பூர்வமான இடத்தை தாய்வான் ஒருபோதும் வகிக்கவில்லை என்றார்.

ஐ. நா. வின் கடமைபற்றி குறிப்பிடுகையில் ஐ.நா. பிரகடனம் நம் கையிலிருக்கின்றது. சக்தி வாய்ந்த சர்வதேசச்சட்டங்களும் தம்மிடமிருக்கின்றன: இவைகளைப் பயன்படுத்தவேண்டும் என்றார் அவர்.

எங்குபார்த்தாலும் இருள் நிலவுகின்றது. அச்சம் வெறுப்பு, பகை இவைகளின் காரணமாகவே இந்த இருள் தோன்றுகின்றது இதற்கெல்லாம் காரணம் மனம்தான். புத்த பகவான்போதித்தபடி மன இருளை போக்கினுல் அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படும் என்றார்.

# 'சேவையை சீராக்க பஸ்களை அனுப்புக"

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பகுதியில் மோசமடைந்து வரும், இலங்கை போக்குவரத்து சபை பஸ் சேவையை நல்ல நிலைமைக்குக்கொண்டுவரசேவைக்கு உகந்தளவு பஸ் வண்டிகளை இப்பகுதிக்கு அனுப்புமாறு போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை இம்மாதம் 22ம் தேதி நடைபெறவிருக்கும் யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவர, உதவி மேயர் திரு ஆ துரைராஜசிங்கம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறுர்.

அக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானத்தையும் அவர் கொண்டுவருவார்.

"நான்காவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு அனேகமாக இலங்கையில் யாழ்ப்பாணத்தில்தான் நடைபெறுமென்பது ஓரளவு உறுதியாகிவிட்டபடியால் அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வரக்கூடிய வேற்று நாட்டவர்களுக்கு வேண்டிய நவீன வசதிகள் இங்குள்ள உல்லாசப் பிரயாணக்க விடுதிகளில் கிடைக்கப் பார்த்துக் கொள்ளவேண்டியது யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் கடமையாகும். ஆகவே, சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு இது விடயமான நடவடிக்கைகளை இம்மன்றம் மேற்கொள்ளவேண்டுமென்றும் 1972ம் வருடத்திற்கான உத்தரவுச் சீட்டுகளை வழங்குவதற்கு முன்பே யாழ். நகருள் இருக்கக்கூடிய உண்டிச்சாலைகள், விடுதிகள் இக்காலத்திற்கேற்ற நவீனவசதிகளை ஏற்படுத்தப் பார்த்துக் கொள்ளவேண்டும் தீர்மானிக்கின்றது.

# விஞக்கொத்து படிவத்தை வாபஸ்பெறக் கோரிக்கை

மாவிட்டபுரம், புதன்

"பத்தாம் வகுப்பு ஆசிரியர்களுக்கு அனுப்பிய விஞக்கொத்துப் படிவத்தை வாபஸ் பெறும்படி 11 வடமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளர் எஸ். சிவஞாகீசர் கோரியுள்ளார்.

ஆசிரியர்களிடையே பெரும் பிரச்னையை ஏற்படுத்தியுள்ள இவ் விஞக்கொத்துப்படிவம் குறித்து வடமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு எஸ். சிவஞானசீலரும் தேசிய ஆசிரியசங்கச்செயளாளர் எஸ். சிவநேசனும் விடுத்துள்ள துண்டுப்பிரசுரத்தில் இப் படிவம் ஆசிரியர்களுக்கு பெரிதும் கஷ்டத்தை ஏற்படுத்துவதாகவும், இதை நிரப்ப வேண்டாம் என்றும் ஆசிரியர்களை வேண்டியுள்ளதுடன் இப்படிவத்தை வாபஸ் பெறுமாறு வடமாநில வித்தியாதிபதியையும் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்க கல்விப்பகுதியால் 1970-ல் நடத்தப்பட்ட அகில இலங்கை 7-ம் வகுப்புக்குரிய புலமைப் பரீட்சையில் மாணிப்பாய் மெமோறியல் வாலித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் க. ஜெயபாலன் தேறியுள்ளார்.

# 723,000 பேருக்கு வேலைவழங்க் திட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அடுத்த 5 வருட காலத்தில் திட்டவேலைவாய்ப்பு அமைச்சினுல் வேலையற்றிருக்கும் 723,000 பேருக்கு வேலை வழங்குவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நாடு திரும்பியதும் இத் திட்டம் பற்றி விபரமாக வெளியிடப்பட விருப்பதாக திட்ட அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

புதிய தொழில் வசதிகள் ஏற்படுத்துவதற்கான நிதி வசதிகள் வரவு, செலவு திட்டத்தில் இடம்பெறுமென்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இத் திட்டத்தை திட்ட அமைச்சே முழுமையாக அமுல் நடத்துமென்றும். இத் திட்டத்தை அமுல் நடத்தும் உத்தியோகத்தர்கள் தற்போது காலியாகவுள்ள சேவை கட்டிடத் திற்கு மாற்றப்படுவார்களென்றும் தெரியவருகிறது.

உத்தேச திட்டத்தின்படி விவசாயப் பகுதியில்தான் கூடிய தொகையினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது. சுமார் 300,000 பேர் இப்பகுதியில் இடம் பெறுவார்கள். கல்வி, போக்குவரத்து சுகாதார பகுதிகளில் சுமார் 200,000 பேருக்கு இடமளிக்கப்படும். புதிய கைத்தொழில்களில் சுமார் 163,000 பேருக்கு இடமளிக்கப்படும். வீடமைப்பு மராமத்து பகுதிகளில் சுமார், 60,000 பேருக்கு இடமளிக்கப்படும்.

அமைச்சுக்கு கிடைத்த தகவல்களின்படி நாட்டில் தற்போது 550,000 பேர் வேலையற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், சக்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

## விற்பனைக்கு

இந்திராணி பத்திகள், நறுமணம் மிக்க உயர்தரமான பத்திகள் திறம் சாம்பிராணி, சந்தனம் வாசனைச் சரக்குகள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டவை. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், செட்டியார் தெரு, கொழும்பு. 3624

பட்டுச் சேலைகள் விற்பனவு! தீபாவளியா! திருமணமா!! உங்களுக்கு வேண்டிய பட்டுச்சேலைகள், முதலியனவற்றுக்கு விஜயம் செய்யுங்கள். வசந்தபுரம் சில்க்ஸ், 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639


## மாதிரி விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன் கைதடி மாதிரி விற்பனை நிலையத்தை விவசாயத்துறை பாராளுமன்ற விவகார அமைச்சர் திரு கே. பி. ரத்நாயக்கா இன்று காலை 10.30 மணிக்கு திறந்து வைப்பார். தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம், இந்த நிலையத்தை ஆரம்பித்துள்ளது.


இன்று மட்டும்

### ராஜா-யாழ்ப்பாணம்

தினசரி காலை: 10-30, பி.ப.: 2-30, 6-30, இரவு: 10-00

ராஜேந்திரகுமார் - சாயிபாபிரான் நடித்த

# அஞ்ஜாஞ

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்,

ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த

# நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - சௌகார் ஜானகி (இரு வேடங்களில்)

ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு நடித்த


# காவியத்தலைவி

கதை-வசனம்-டைரக்ஷன்: கே. பாலசந்தர்

### வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00

மகத்தான தீபாவளி வெளியீடு!



* ஜெய்சங்கர்
* கே. ஆர். விஜயா
* சுந்தரராஜன்

சௌகார் ஜானகி

நாகேஷ்

விஜயலலிதா

அசோகன்

நடித்த

தேவரின்

# அக்கா தங்கை

இன்று மட்டும்

### லிடோ [யாழ்நகர்]

காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-30, இரவு 9-30.

ஜெமினி—வாணிஸ்ரீ—முத்துராமன் மற்றும்பலர் நடித்த

# தபால்காரன் தங்கை

நாளை முதல்

# ஆராதனை


மேற்கு ஜெர்மனி ஒலிம்பிக்

# 'டெக்கத்லான்' சாம்பியன் யாழ்ப்பாணம் வருகின்றார்

யாழ்ப்பாணம் வியா. மெக்ஸிக்கோவில் கடைசியாக நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 'டெக்கத்லான்' சம்பியன் விருதைப் பெற்ற, மேற்கு ஜேர்மன் விளையாட்டு வீரர் ஹூக்காகி லிங்மான் இம்மாதம் 29-ம் திகதி யாழ். நகர் வருகின்றார்.

விளையாட்டமைச்சின் அழைப்பின் பேரில் தற்போது இலங்கையில் தங்கியிருந்து மாவட்டங்கள் தோறும் சென்று பாடசாலை விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளித்து வரும் வீரர் ஹூக்காகி லிங்மான் இம்மாதம் 29-ம், 30-ம், 31-ம் திகதிகளில் வடமாகாண பாடசாலை விளையாட்டுப் போதனாசிரியர்களுக்கு, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பயிற்சி அளிப்பார். இப்பயிற்சி காலையும், மாலையும் நடைபெறும் இரவு விளையாட்டுச் சம்பந்தமான திரைப்படக் காட்சியும் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

இவர் இங்கு வருவதற்கான சகல ஏற்பாடுகளையும் வடமாகாண கல்வி இலாகாவின் அனுசரணையுடன், வடமாகாண விளையாட்டமைச்சின் பிரதம உதவி யோகஸ்தர் திரு. எம். இருபாகரன் மேற்கொண்டு வருகின்றார். (தே நி)

## பதவிதுறப்பார்?

பாரிஸ், அக் 13

சரான்மன்னர் ஷா தமது மூத்த புதல்வரை சிம்மாசனத்தில் ஏற்றமுகமாக தன்னர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதுபற்றி ஆலோசித்து வருவதாக செய்திகள் கூறுகின்றன.

உதைபந்தாட்டம்

## சென். பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் மூன்று பிரிவுகளிலும் வெற்றி பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி 'ஏ' பிரிவுப் போட்டியில் 3-1 கோல்களாலும், 'பி' பிரிவுப் போட்டியில் 2-0 'சி' பிரிவுப் போட்டியில் 2-0 கோல்களாலும் வெற்றி பெற்றது.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

## றேடியோ திருடினராம்

யாழ்ப்பாணம், வியா. உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த அ இரத்தின சபாபதி என்பவர் வீட்டில் இருந்த றேடியோவை பட்டப்பகலில் ஒருவன் திருடியதாகவும் இதுசம்பந்தமாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டதாகவும் பின்னர் றேடியோவை அவர் திருப்பிக்கொடுத்து மன்னிப்புக்கோரியதாகவும் அறியப்படுகிறது.


### நாகம்ஸ்சினிமா

சுன்னாகம்

தினசரி: 4-30

சனி, ஞாயிறு: 10-30

CIRCUS STARS

தினசரி 6-30, 9-45

சனி, ஞாயிறு 2-30

ஔவையார்

### வெல்லிசினிமா

பி ப 2-30, 6-30, 10-00

ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி நடித்த

வல்லவன் ஒருவன்

MANOHARA

Jaffna

Daily 4 shows

Guliano Gemma

Bibi Andersson

in

BLOW HOT

BLOW COLD

(color - strictly for adults)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

### சந்தைக் குத்தகைகள்—1972

1-1-1972-ம் ஆண்டுதொடக்கம் 31-12-1972 வரை கீழ்க்காணும் சந்தைகளுக்கும், காலக்குமான கேள்விகள், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 26-10-71 செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகர அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டவையாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டவைவாகவும் இருத்தல் வேண்டும். கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். எந்தச் சந்தைக்கு கேள்விகள் சமர்ப்பிக்கப்படுகின்றனவோ, அந்தச் சந்தையின் பெயர், காலயின் பெயர் கேள்வியின் மேலுறையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

2. கேள்விப்படிவங்கள் 25-10-71-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 3-00 மணி வரை அதற்குரிய பணத்தைச் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர். | கேள்விப் பத்திரத்தின் விலை. | கேள்விப் பத்திரம் கணிப்பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பொறுப்புப் பணம். | கேள்விப் பத்திரம் கணிப்பெறுவதற்கு முன் தோத்தாரிசின் உறுதிக்காகச் செலுத்தப்படவேண்டிய பணம். |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 2. பெரியகடை மீன்சந்தையும், மீன் சந்தையில் கடதாசி விற்கும் உரிமையும் | 10-00 | 250-00 | 250-00 |
| 3. செங்குந்தர் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 4. சின்னக்கடை சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 5. அரியாலைச் சந்தை (பழையது) | 5-00 | 50-00 | |
| 6. அரியாலைச் சந்தை (புதியது) | 5-00 | 50-00 | |
| 7. கொழும்புத்துறை சந்தை | 5-00 | 50-00 | |
| 8. நாவாந்துறைச் சந்தை (பழையது) | 5-00 | 50-00 | |
| 9. பாஷையூர் சந்தை | 5-00 | 50-00 | |
| 10. பண்ணை மீன் சந்தை | 5-00 | 50-00 | |
| 11. நாச்சிமார்கோவில் சந்தை | 5-00 | 50-00 | |
| 12. பெரியகடை காலை | 5-00 | 50-00 | |

3. கேள்விக்காரர் யாவரும் அவர்கள் பகுதிக் கிராம சேவையாளரிடமிருந்து நதிவுச்சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இதுவிடயமாக இதர தகவல்களைப்பெற விரும்புவோர் அவற்றை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகரசபைமன்றம், யாழ்ப்பாணம்.
12-10-71
3075

(ஏ. நி. சுந்தரம்)
ஆணையாளர்,
யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்


### றீகல் — (யாழ்ப்பாணம்)

தினசரி பி. ப. 2-00, இரவு 10-00 மணி

சிவாஜி - தேவிகா நடித்த

# அன்புக்கரங்கள்

Daily 5-15, 7-15 P. M. Sat. Sundays 10-30

Jack Lord - Shirley Knight in

THE COUNTERFEIT KILLER (Color)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு வங்கப்பிரச்னைக்கு

# ஜனநாயக முறையில் அரசியல் தீர்வு வேண்டும்

## ஐ. நா. வில் இலங்கை பிரதம மந்திரி வலியுறுத்து

## மக்களிடம் ஆட்சியை மாற்ற யாஹ்யாகான் விருப்பம்

நியூயோர்க், அக்டோபர் 13

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு ஜனநாயக முறையிலும், அரசியல் சாஸனத்தின் அடிப்படையிலும் தீர்வொன்று காணப்படவேண்டும் என்று இலங்கைப் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஐ. நா. பொதுச்சபையில் நேற்று வலியுறுத்தினார்.

பாகிஸ்தானில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சிப் பொறுப்பை மாற்றிவிடப்போவதாகப் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகான் நேற்று வானொலியில் விடுத்த செய்தியொன்றில் கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் நிலைகொள்ளத் தொடங்கியிருப்பதாகவும், எல்லையிலிருந்து பொதுமக்கள் அப்புறப்படுத்தப்படுவதாகவும் "பிரஸ் ட்ரஸ்ட் ஆப் இந்தியா" அறிவிக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தானைப் பாகிஸ்தான் அமைப்பிலிருந்து துண்டித்துவிட இந்தியா பிரிவினைவாதிகளுடன் சேர்ந்துகொண்டு முயற்சி மேற்கொண்டுவருவதாக யாஹ்யாகான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகள் தம் தாயகத்திற்குத் திரும்பிச் செல்லும் வகையில் அங்கு எழுந்துள்ள பிரச்னைக்கு ஜனநாயக முறையில் அரசியல் சாஸனத்தின் அடிப்படையில் தீர்வொன்று காணப்படவேண்டுமென்று இலங்கைப் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஐ. நா. சபையில் கூறினார்.

ஐ. நா. பொதுச்சபையில் இப்போதைய கூட்டத் தொடரில் இலங்கைப் பிரதமர் உரைநிகழ்த்தினார். இந்து சமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற இலங்கையின் பிரேரணையை இலங்கைப் பிரதம மந்திரி மகாசபையில் சமர்ப்பித்து உரைநிகழ்த்தினார். அந்த உரையில் ஒரு பகுதியில் பாகிஸ்தான் பிரச்னையையும் பிரதமர் குறிப்பிட்டார்.

கிழக்கு வங்காளத்திலிருந்து இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ள லட்சக்கணக்கான அகதிகள் பற்றிக் குறிப்பிட்ட அவர் இந்த அகதிகளின் வருகையால் இந்தியாவின் பொருளாதாரத்தில் பெரும் சுமை விழுந்திருக்கிறது. இந்தப் பிரச்னையை உலக நாடுகள் எல்லாமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இது ஒரு மனிதாபிமானப் பிரச்னை என்றார் பிரதமர்.

## இந்தியா மீது யாஹ்யா வசைமாரி

நேற்றுப் பாகிஸ்தான் வானொலியில் உரைநிகழ்த்திய பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகான் தமது உரையின் பெரும்பகுதியை இந்தியாமீது வசைபாடுவதிலேயே செலவிட்டார்.

பாகிஸ்தானுக்கான புதிய அரசியல் திட்டம் பற்றிய தகவல்களை அவர் வெளியிடக்கூடுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

தேசிய சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டு தகுதியற்றவர்களாக்கப்பட்டுள்ள 78 அவாமிலீக் பிரதிநிதிகளினதும் காலியான ஸ்தானங்களுக்குப் புதிதாக இடைத்தேர்தல் நடைபெற்றபின்னர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்துவிடப்போவதாக ஜெனரல் யாஹ்யாகான் தெரிவித்தார். டிசம்பர் மாதம் 27ந் திகதி இடைத்தேர்தல் நடக்குமென்றார். டிசம்பர் 20ந் திகதி புதிய அரசியல் திட்டம் வெளியிடப்படும் என்றார். தேர்தலின் பின்னர் தேசிய சட்டசபை கூடுமென்று தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்துவதில் எனக்கு விருப்பமுண்டு. ஆனால் எந்த எதிர்ப்பையும் சகித்துக்கொள்ள முடியாதென்று அரசியற் கட்சிகளை எச்சரித்துள்ளார் அதிபர் யாஹ்யாகான்.

பாகிஸ்தானை இந்தியா அழித்துவிடுவதற்கு முயற்சி எடுத்துவருவதாக யாஹ்யாகான் குற்றஞ்சாட்டினார்.

பிரிவினைவாதிகளுடன் சேர்ந்துகொண்டு கிழக்குப் பாகிஸ்தானைத் தனியாகத் துண்டித்துவிட இந்தியா முயற்சி எடுக்கின்றது. எல்லைப்பகுதியில் ராணுவ ஊடுருவல்களை இந்தியா செய்துள்ளது. ஆனால் இந்த நடவடிக்கைகள் பற்றி பாகிஸ்தான் மிகவும் விழிப்பாகவே இருந்துவருகின்றது என்றார்.

இதேவேளையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே எல்லைப்பகுதியில் பெருமளவில் பாகிஸ்தான் படைகள் நடமாடத் தொடங்கியிருப்பதாகவும் பாகிஸ்தான் பகுதியில் பொது மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருவதாகவும் இந்திய பிரஸ்ட்ரஸ்ட் அறிவித்துள்ளது.

லண்டனிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானில் நிவாரண உதவி வேலைகளில் ஈடுபடுவதற்காக வந்திருந்த ஒரு குழுவைச்சேர்ந்த இருவருக்கு பாகிஸ்தான் அரசாங்கம் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளதாம். கடந்த மார்ச் மாதம் 4ந் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டார்களாம்.



### இளவரசர் ஆகாகான் வேண்டுகோள்

இந்தியாவில் வந்து குவிந்துள்ள அகதிகளுக்குப் பெருமளவில் உதவிபுரிய முன்வரும்படி உலக நாடுகளை அகதிகள் சம்பந்தமான ஐ. நா. ஹைகமிஷன் இளவரசர் சதுருதீன் ஆகாகான் மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளார்.

களும், வசதிகளும் கிடைக்காமற்போனால் ஆயிரக்கணக்கான குழந்தைகள், முகாம்களில் மடிந்துபோக நேரலாமென்று அவர் எச்சரித்துள்ளார்.

## சோவியத் யூனியனுக்கும் நிக்ஸன் விஜயம் செய்வார்

நியூயோர்க் அக். 13

அமெரிக்க அதிபர் திரு ரிச்சர்ட் நிக்ஸன் சோவியத் யூனியனுக்கும் விஜயம் செய்வார் என்பது இப்பொழுது உறுதியாகியுள்ளது.

சீனாவுக்கு அவர் மேற்கொள்ளும் விஜயத்தின் பின்னர் சோவியத் யூனியனுக்கும் போவார். அடுத்த ஆண்டு மேமாதம் இறுதிவாக்கில் இந்த விஜயம் இடம்பெறும்.

இத்தகவலை அதிபர் நிக்ஸனே வெளியிட்டார். சமீபத்தில் சோவியத் வெளிஉறவு அமைச்சர் திரு குரோமிக்கோ அதிபர்மாளிகைக்கு விஜயம் செய்தபோது சோவியத் யூனியனுக்கு வருகைதரும்படியான சோவியத் அழைப்பை அதிபர் நிக்ஸனிடம் கொடுத்தாராம்.

இந்த இரு கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் தாம் மேற்கொள்ளும் விஜயம் அவைகளுக்கிடையிலுள்ள தகராறை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக அர்த்தம் கொள்ளக்கூடாதென்றும் இந்த நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவும் அவைகளுடனான பிரச்னைகள் பற்றி ஆராயவுமே தாம் அங்கு விஜயம் செய்வதாகவும் அதிபர் நிக்ஸன் தெரிவித்தார். இந்த நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலுள்ள எல்லா பிரச்னைகள் பற்றியும் தாம் விவாதிக்கப் போவதாகத் தெரிவித்த அதிபர் ஆயுதக் குறைப்பு, மத்தியகிழக்கு போன்றவையும் விவாதிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அதிபர் நிக்ஸன் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யவிருப்பது பற்றிய செய்தி ஏககாலத்தில் மாஸ்கோவிலும் அறிவிக்கப்பட்டது.

தமது சோவியத் விஜயம் பற்றி சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

சமாதான காலத்தில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யும் முதலாவது அதிபர் திரு நிக்ஸனாவார்.

## அரபு நாடுகளுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவும்

மாஸ்கோ, அக். 13

மத்தியகிழக்கில் அமைதி ஏற்படுவதற்கு சோவியத் யூனியன் தொடர்ந்து முயற்சி எடுத்து வரும் என்று சோவியத் அதிபர் நிக்கொலாய்பொட்கோர்னி எகிப்துக்கு உறுதியளித்துள்ளார்.

மாஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ள எகிப்திய அதிபர் அன்வர் சதாத் நேற்று சோவியத் தலைவர்களுடன் ஆலோசனைகளை ஆரம்பித்தார். இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பு தொடர்ந்து இருக்கும் வரையில் அரபுநாடுகளுக்கு சோவியத்யூனியன் தொடர்ந்து ராணுவ உதவிகளை வழங்கிவரும் என்றும் அவர் சொன்னார்.

## டீன் அச்சீஸன் காலமானார்

நியூயோர்க், அக். 13

திரு ட்ரூமன் அமெரிக்க அதிபராக இருந்தகாலத்தில் ராஜாங்க அமைச்சராகப் பணி புரிந்த திரு டீன் அச்சீஸன் நேற்றுக் காலமானார். அவருக்குவயது 78. இரண்டாவது உலக யுத்தத்தின்பின் இந்தப்பதவி வகித்த இவர் மிகவும் பிரபல்யமானவராக விளங்கினார்.

## முஜிபுர் தந்தையின் கோரிக்கை

புதுடில்லி, அக். 13

ஷேக்முஜிபுர் ரஹ்மானின் வயது முதிர்ந்த தந்தையான ஷேக்லுத்புர் ரஹ்மான் தமது மகனைப் போய்ப் பார்ப்பதற்கு அனுமதிவழங்கும்படி அதிபர் யாஹ்யாகானிடம் அனுமதிகோரி தந்திகொடுத்திருக்கிறாராம்.

ஈரான் தேசிய விழாவில்

## பாக். இந்திய அதிபர்கள்

புதுடில்லி, அக். 15

ஈரான் தேசத்தின் 2500 வது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்து கொள்ள உலகின் பல நாடுகளையும் சேர்ந்த சுமார் 56 அரசாங்கத் தலைவர்கள் கலந்துகொள்வார்கள்.

இந்திய அதிபர் திரு வி. வி. கிரியும், பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகானும் இந்த விழாவில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். இந்த இரு தலைவர்களும் ஈரான் மன்னர் அளிக்கும் விருந்துகளின் போது சந்தித்துக்கொள்ள நேரலாம். ஆனால் எதுவித மனக்கசப்பும் நேராதபடி ஈரானிய அதிகாரிகள் பார்த்துக் கொள்வார்கள் என்று தெரிகின்றது.

### கூட்டம்

யாழ்ப்பாணம், புதன் யாழ். லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியில் இம்மாதம் 16-ம் திகதி இக்கல்லூரி பழைய மாணவரது புனரமைப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சீதனக் கொடுமையை ஒழிக்க சட்டம் இயற்றுக'

## யாழ். மாநகரசபைக்கு வரவிருக்கும் பிரேரணை

குருநகர், வியாழன்

"பெண் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அவர்களை நல்லமுறையில் வாழவைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆவல் கொண்டிருக்கும் வறிய பெற்றோர்கள் சீதனம் என்ற கொடுமையினால் துன்புற்று வருகின்றனர். வாழவேண்டிய பருவத்தில் வாழ்க்கை நடத்த ஆவல் கொண்டுள்ள எத்தனையோ கன்னியர்கள் இந்த சீதனக் கொடுமையால் வாழமுடியாமல் தவிக்கின்றனர். இல்லற வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே சில இளம்குடும்பங்கள் இக்கொடிய வியாதியால் சீர் குலைந்து கோர்ட்டில் நிற்கின்றன. எனவே கொடிய வியாதியை முறியடிக்க இன்றைய சோஷலிச அரசு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்".

இவ்வாறு பிரதம அமைச்சரையும், கலாச்சார அமைச்சரையும் கோரும் தீர்மானம் ஒன்று இம்மாதம் 22ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ் மாநகரசபையின் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கின்றது. 5ம் வட்டார உறுப்பினர் எஸ். ஜே. அன்ரனியால் இத் தீர்மானம் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏழை மக்களுக்காகப் பாடுபடும் அரசாங்கம் தனது சோஷலிசக் கொள்கைகளை அமுல் நடத்தும் பொழுது வறிய மக்களின் வாழ்வில் இருந்துவரும் சில வேண்டாத பழக்கவழக்கங்களையும், சமூகக் குறைபாடுகளையும் சட்டமூலம் நீக்க வேண்டியது அவசியமாகிறது எனத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

......

### பாராட்டும் பிரிவுபசாரமும்

யாழ்ப்பாணம், வியா.

மட்டுவில் சந்திரபுர விநாயகரோதய மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றித் தற்போது 1ம் தர அதிபராகப் பதவியுயர்வு பெற்று வசாவிளான் மகாவித்தியாலயத்திற்குச் செல்லுகின்ற திரு பி. சபாரத்தினத்திற்கு பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பெற்றோராலும் பாராட்டும் பிரிவுபசாரமும் அளிக்கப்பட்டது.

திரு. கனகசபை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு எஸ். கனகசபாபதி புதிய அதிபர் திரு. செல்லத்துரை, வித்துவான் திருஞானசம்பந்தம் உட்பட ஆசிரியர்கள் பலர் பிரிந்துசெல்லும் அதிபரின் சேவைத்திறனையும் குணப்பண்புகளையும் பாராட்டிப் பேசினர். பாராட்டிதழும் வழங்கப்பட்டது. (கு வி ம)

புலோலியில்

### திருடர் நடமாட்டம்

புலோலி, புதன்

புலோலிப்பகுதியில் இரவு வேளைகளில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாம். பொது மக்கள் அச்சம் கொள்கிறார்களாம்.

திருடர்கள் வாழைத் தோட்டங்களில் இரவுநேரத்தில் புகுந்து வாழைக்குலைகளை திருடிச்சென்று விடுகிறார்களாம். இதனால் பொது மக்கள் தங்கள் வீடுகளில் இரவில் நித்திரையின்றி விழித்திருக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனராம்.

......

### பிரதமருக்கு வேண்டுகோள்

சங்கானை, புதன்

தமிழ் சிங்கள மக்களின் பரஸ்பர உறவை முன்னிட்டு தபால் அமைச்சர் செல்லையா குமாரசூரியரைத் தொடர்ந்தும் மந்திரிசபையில் வைத்துக்கொள்ளுமாறு மூளாய் கிராம முன்னேற்றச்சங்கம் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கு தந்திமூலம் வேண்டுகோள் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

......

### முற்போக்கு வாலிபர் சங்கம் அனுதாபம்

அரியாலை, புதன்

யாழ்ப்பாணத்தின் முன்னணி முதல்வரும் பிரபல நியாயவாதியும் சமயத் தொண்டருமான திரு சி. பொன்னம்பலம் எம்மத்தியிலிருந்து நீங்கினாலும் அவர் எமக்கு சாதி, இன, மத, மொழி வேறுபாடின்றிச் செய்த தொண்டுகள் நிலைத்து நிற்கும்.

இவ்வாறு காலஞ்சென்ற திரு சி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக்கூட்டம் ஒன்றில் தலைமையுரையாற்றிய திரு. எம். ஜி. இல்லைநாயகம் குறிப்பிட்டார்.

அரியாலைமேற்கு கலைமகள் முற்போக்கு வாலிபர் சங்கத்தினரால் இவ்வஞ்சலிக் கூட்டம் நடத்தப்பட்டது. மறைந்த பெரியாரின் ஆன்ம சாந்திக்காக இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

......

### கல்வியமைச்சர் திட்டம்

மாத்தளை, புதன்

நகரத்திலுள்ள பாடசாலைகளிலும், கிராமங்களிலுள்ள பாடசாலைகளிலும் பயிலும் மாணவர்களுக்கு கல்வியில் சம சந்தர்ப்பம் அளிப்பதற்கான திட்டமொன்றை கல்வி அமைச்சு தயாரித்துள்ளது. இத் திட்டத்தின்மூலம், இந் நாட்டுக்கு தேவையான விஞ்ஞானிகளையும், தொழில் நுட்ப நிபுணர்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் மாத்தளை எம். பி. மேஜர் ஜெனரல் ரிச்சாட் உடுகம பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

......

### 19,800 ரூபா மானியம்

ஊரதீவு, புதன்

புங்குடுதீவுக் கிராமசபைக்கு அரசாங்கம் 19,800 ரூபா மானியமளித்துள்ளது. இந்த நன்கொடையின் மூலம் புங்குடுதீவில் நிரந்தரமான சந்தைக் கட்டிடம் ஒன்றை புங்குடுதீவு கிராமசபை நிறுவவிருக்கிறது.

———

### ப. மா. சங்கம் தீர்மானம்

ஊரதீவு, புதன்

ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலைக்குப் புதிய தலைமையாசிரியர் ஒருவரை நியமிப்பதோடு, மலசலகூடம் ஒன்றையும் அமைத்துதருமாறு அரசினரைக் கோருவதென, மேற்படி வித்தியாசாலைப் பழைய மாணவர்சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### ஆயுள்வேத சான்றிதழ்கள்

பருத்தித்துறை, புதன்

பதிவுபெற்ற ஆயுள்வேத மருத்துவரால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ்கள் ஆயுள்வேத மருத்துவ மன்றத்தினால் விசேடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள படிவத்தில் வழங்கப்படல் வேண்டுமென ஆயுள்வேத மருத்துவமன்றம் முடிவு செய்துள்ளது. பதிவுபெற்ற ஆயுள்வேத மருத்துவர்களுக்கு மட்டுமே இவ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் ஆயுள்வேத மருத்துவ மன்றத்தின் உத்தியோகபூர்வமான அழுத்திப் பதிக்கப்பட்ட இலச்சினையும் ஆயுள்வேத மருத்துவரின் பதிவிலக்கமும் ஒவ்வொரு படிவத்திலும் இருக்கும்.

இவ்வித படிவங்களில் எழுதப்படும் மருத்துவச் சான்றிதழ்களே இனிமேல் ஏற்றுக் கொள்ளப்படுமென சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள அரசாங்கச் சுற்றுநிருபம் கூறுகிறது.

### பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் பயின்று 70-ம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத்தோற்றியவர்களின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

சி. இராசரத்தினம், இ. கணபதிப்பிள்ளை, செ. கணேசலிங்கம், த. கந்தசாமி, இ. கனகேந்திரம், மு. கிருஷ்ணன், சை. பீ. சத்தியா, செ. சின்னத்துரை, தே. குணநாயகம், ஞ. நா. ஞானப்பிரகாசம், ஆ பி. பத்திநாதர், பி. பாக்கியநாதர், வே. பாலசுந்தரம், ஜே. பிலிப்பையா, ஞ. மரியாம்பிள்ளை, இ. யோசேப்பு, ஓ. ப. சம். சகோ விக்ரர் இம்மானுவேல்.

......

### வேணுகானம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். சங்கீதசபை ஆதரவில் யாழ். கலைமன்ற மண்டபத்தில் இம்மாதம் 15ந் திகதி பிரம்மஸ்ரீ ஆர். மூர்த்தி ஐயர் புல்லாங்குழல் வாசிப்பார்.

### 'நிரந்தர அதிபரை நியமிக்கவும்'

மாவிட்டபுரம், புதன்

'மயிலிட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கு நிரந்தர அதிபரை நியமித்து இப் பாடசாலை வளர்ச்சிக்கு உதவுமாறு மயிலிட்டி வடக்கு பாரதி சனசமூக நிலைய தலைவர் திரு வே. மாணிக்கம் வட மாநிலக் கல்வியதிபதியைக் கோரியுள்ளார். வடமாநிலக் கல்வியதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'300க்கு மேற்பட்ட பிள்ளைகள் இப்பாடசாலையில் கல்வி பயின்ற போதிலும் அவர்கள் இருந்து படிப்பதற்குப் போதிய கட்டிடங்கள் இல்லாமல் இருப்பதுடன் 5 வருடங்களாக நிரந்தரமாக ஒரு அதிபர் நியமிக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் கஷ்டப்படுவதுடன் பாடசாலை முன்னேற்றமும் தடைப்படுகிறது. ஆதலால் அதிபர்களை குறுகிய காலத்தில் இடமாற்றாது நிரந்தரமாக ஒரு அதிபரை நியமித்தல் வேண்டும்' என்று வட பகுதிக் கல்வியதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் கேட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாணவிகள் பண்பாட்டை பாதுகாத்து நடக்கவேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

மாணவிகள் தமது கலாச்சாரத்தையும் பண்பையும் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பும் பாதுகாத்து நடக்க வேண்டும். உயர் பதவிகள் வகிக்கும்போதும் இல்லத்தரசிகளாக விளங்கும்போதும் தாம் பயின்ற கல்லூரியின் புகழை நிலைநாட்ட வேண்டும்.

நேற்று முன்தினமிரவு வேம்படி மகளிர் உயர்தர மாணவியர் மன்றத்தினரது இராப்போசன விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநில வித்தியாதிபதி டபிள்யூ. டி. ஓ. மகாதந்தில மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் வேம்படி என்னும் சொல் ஆழமான கருத்தை உடையதெனவும் உறுதி வாய்ந்த வேம்புபோல் இக் கல்லூரி மாணவிகளும் உறுதியுடையவர்களாகவும் ஊக்கமுடையவர்களாகவும் திகழ வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இக் கல்லூரி அதிபர் செல்வி ப. ஆறுமுகம் தனது உரையின்போது முதற் பெண் அரசாங்க சபை அங்கத்தினரையும், முதல் முஸ்லிம்பெண் வைத்தியகலாநிதியையும் முதற்பெண் மாநில வித்தியாதிபதியையும் ஈழநாட்டுக்கு அளித்தது வேம்படி மகளிர் கல்லூரியே என்றார்.

மன்றத்தலைவி செல்வி பவானி ஆம்ஸ்ரோங் தலைமையில் நடைபெற்ற இவ்வுபசாரத்தின்போது யாழ் மத்தியகல்லூரி அதிபர் ஈ. கே. சண்முகநாதன் செல்வி சுவேந்திரினி ஏபிரகாம் உட்பட பலர் உரையாற்றினர்.

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

நேற்று அம்பாறையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 366வது இலக்கச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

31 L 0551 ரூ 91,710

இரண்டாவது பரிசு

34 O 0736 ரூ. 36,684

மூன்றாவது பரிசு

19 U 0562 ரூ. 9,171

தலா 458 ரூபா 55 சதம் பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 18 A 0645 | 26 A 0808 |
| 29 A 0634 | 28 A 0151 |
| 08 A 0446 | 01 B 0469 |
| 25 B 0957 | 08 C 0979 |
| 23 C 0186 | 20 C 0758 |
| 31 D 0643 | 34 D 0224 |
| 23 D 0410 | 15 D 0384 |
| 06 D 0259 | 02 D 0948 |
| 21 D 0697 | 14 E 0832 |
| 07 E 0790 | 28 E 0007 |
| 31 E 0142 | 27 E 0546 |
| 02 F 0628 | 18 G 0014 |
| 22 G 0593 | 36 G 0708 |
| 40 G 0477 | 03 G 0946 |
| 36 G 0734 | 20 G 0612 |
| 28 G 0453 | 19 G 0623 |
| 24 H 0395 | 03 H 0871 |
| 35 H 0640 | 03 H 0194 |
| 17 H 0148 | 35 H 0962 |
| 33 H 0048 | 07 J 0596 |
| 27 J 0809 | 01 J 0522 |
| 09 K 0435 | 39 K 0802 |
| 14 L 0570 | 14 M 0509 |
| 22 M 0782 | 28 M 0162 |
| 09 N 0487 | 32 N 0922 |
| 06 O 0582 | 28 O 0911 |
| 13 O 0179 | 18 P 0964 |
| 39 P 0869 | 26 P 0171 |
| 08 R 0286 | 21 R 0308 |
| 39 R 0760 | 30 R 0139 |
| 36 R 0828 | 27 R 0650 |
| 28 S 0432 | 27 S 0659 |
| 09 S 0775 | 20 T 0394 |
| 37 T 0209 | 14 T 0921 |
| 37 T 0984 | 26 T 0488 |

| | |
|---|---|
| 39 U 0712 | 08 U 0866 |
| 17 U 0132 | 02 U 0848 |
| 11 U 0269 | 04 U 0234 |
| 03 U 0202 | 02 U 0140 |
| 07 U 0784 | 10 V 0462 |
| 29 V 0403 | 21 V 0451 |
| 22 V 0129 | |
| 32 W 0577 | 35 W 0008 |
| 34 X 0403 | 06 X 0543 |
| 24 X 0409 | 25 X 0919 |
| 11 X 0098 | 34 X 0985 |
| 21 X 0916 | 08 X 0147 |
| 17 Y 0486 | 03 Y 0377 |
| 15 Y 0004 | 22 Z 0944 |
| 36 Z 0532 | 32 Z 0165 |
| 27 Z 0693 | 20 Z 0490 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

இலங்கையில்

# தோல் மினி ஆடை

கொழும்பு, செவ்வாய்

தோலால் செய்யப்பட்ட பெண்களுக்கான மினி ஆடைகளை இலங்கைத் தோற்பொருள் கூட்டுத்தாபனம் இன்று விற்பனை செய்யவிருக்கிறது. இத்தகவலை இலங்கைத் தோற்பொருள் கூட்டுத்தாபன உதவிப் பொது முகாமையாளர் திரு. ஐ. குமாரதுங்க செய்தித் தாபனத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இளம் வயதினரிடையே இது பெரும் செல்வாக்கைப் பெற்றிருப்பதாகக் கூறிய அவர் உற்பத்திச் செலவினங்களைச் சமாளிப்பதற்காக இக்கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படும் சப்பாத்துக்களின் விலை விரைவில் அதிகரிக்கப்படுமெனவும் ரஷ்யாவுக்குச் சப்பாத்துக்கள் ஏற்றுமதியாகும் மக்கள் நினைப்பதுபோல் அவ்வளவு இலாபம் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். (இ பி ஏ)

# பாடசாலை இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி புனிததிரேசா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய மைதானத்தில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. ஆனந்தசங்கரி இவ் வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார். வடமாநில பிரதம கல்வியதிகாரி திரு க. கணேசபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். கிளிநொச்சி வட்டாரக் கல்வியதிகாரி திரு த. இராசலிங்கம் கொடியேற்றி வைப்பார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி இ. யோகநாதன் பரிசில்கள் வழங்குவார்.

மன்னார்

# ப. நோ. கூ. சங்க தீர்மானங்கள்

மன்னார், புதன்

புனரமைப்புச் செய்யப்பட்ட மன்னார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் அதன் புதிய தலைவர் ஜனாப் எஸ் எம் ஏ காதர் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் புதிய இயக்குனர்கள் ஜனாப் எம் ஏ காதர், திரு ஐ பிரான்ஸிஸ், திரு ஏ எம் அராம் ஆகியோருடன், பழைய இயக்குனர்கள் ஐவரும் சமூகமளித்திருந்தனர்.

மாந்தை வடக்கு ப நோ கூ சங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள பெற்றோல் நிலையத்தை மன்னார் ப நோ கூ சங்கத்திற்கு மாற்றும் தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அடுத்தகூண்டியிலிருந்து இரசீவிநியோகத்தை ஏற்று நடாத்துவதோடு சின்னக்கடையில் தற்போது இயங்கிவரும் ஜவுளி விற்பனவு நிலையத்தை பெரியகடைக்கு உடனடியாக மாற்றுவது என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# நடமாடும் படக் கண்காட்சி

பருத்தித்துறை, புதன்

நடமாடும் விஞ்ஞானக் கண்காட்சி வவனியா காவித்தியாலயத்தில் இம்மாதம் 22, 23-ம் திகதிகளிலும், முள்ளித்தீவு மகாவித்தியாலயத்தில் 25-ம் திகதியும் நடைபெறவிருக்கிறது. வடமாநில விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எம். அற்புதநாதன் இதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறார்.

# விளையாட்டுப் போட்டி

வல்வை, புதன்

வல்வை சனசமூக சேவா நிலையத்தாரால் நடாத்தப்படும் வல்வை நகரசபைக் குட்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி இம்மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு யாழ். பதில் சுகாதார அத்தியட்சகர் திரு. கே. சற்குரு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம், கெனிகஸ் விளையாட்டுக்கழகம், ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகம், றெயின்போ விளையாட்டுக்கழகம், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம், தொண்டமானாறு இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன.

சுழிபுரம்

# பெரியபுலோவில் காணிப்பங்கிடு

சுழிபுரம், புதன்

சுழிபுரம் பெரியபுலோ பகுதியிலுள்ள நிலமில்லாத மக்களுக்கு நிலம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி கவனித்து வருகின்றார். இத்திட்டத்துக்கு பெரியபுலோ பகுதியிலுள்ள தர்மசாதன நிலங்களை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. சுழிபுரம் கிராம சேவையாளர், சுழிபுரம் கிராமசபைத் தலைவர் ஆகிய இருவரும் நிலம் பங்கிடு செய்வதற்கான ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-30; பகல் 12-45 மாலை 6-00; இரவு 9-00)

294 மீ ஆகிய 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமியநற்சிந்தனை 7-00 உரை நிகழ்ச்சி, 7-15 ஜதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை 6-15 ஒடிவிளையாடு பாப்பா 6-30 தாளவாத்தியக் கச்சேரி, 7-15 விவசாய நிகழ்ச்சி, 7-30 புல்லாங்குழலும் வயலினும், 7-45 ஐ நா பற்றிய விளக்கவுரை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-55 இஸ்லாமிய பாடல்கள், 9-30 கலந்துரையாடல், 10-00 இசைஅரங்கம், 10-30 செய்தித்தொகுப்பு.

சாம்பியாவை

# தென் ஆபிரிக்கா மதிக்கவேண்டும்

வாஷிங்டன், அக். 13

சாம்பியாவின் ஆதிபத்திய உரிமைகளை மதிக்கும்படியும் எல்லையில் ஆக்கிரமிப்புமேற் கொள்ளவேண்டாமென்றும் தென்னாபிரிக்காவை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை ஐ. நா. பாதுகாப்பு சபை நிறைவேற்றியுள்ளது.

சாம்பியாவின் எல்லைக்குள் தென்னாபிரிக்கா ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சாம்பியா செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து பாதுகாப்புச்சபை இத்தீர்மானத்தை ஆமோதித்தது.

இந்தப்புகாரை தென்னாபிரிக்கா மறுத்துள்ளது.


## மணப்பெண்களுக்கு ஓர் இணையற்ற விசேட வெகுமதி!

திருமணத்தை எதிர்நோக்கி நிற்கும் எந்த ஒரு மணமகளும், திருமணப் பதிவுகாரரின் கடிதம், தனது திருமண அறிவித்தல் அல்லது திருமணநிச்சயார்த்தத்தை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளத்தக்க ஏதாவதொரு தஸ்தாவேஜு, இவற்றில் ஏதாவதொன்றைக் காண்பித்து, அத்துடன் 1971 அக்டோபர் 31-ந் திகதி நடைபெறும் 31-வது மஹாஜன சம்பத சீட்டிழுப்பு டிக்கெட்டுகளில் இருபத்தைந்தை (25) அல்லது 1971 அக்டோபர் 18-ந் திகதி நடைபெறும் 367-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு டிக்கெட்டுகளில் ஐம்பதை (50) சேர்த்து அந்தந்த சீட்டிழுப்பு திகதிகளுக்கு முன், கையளித்து, கொழும்பு-3, காலி வீதி 502/1ம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 950/- அல்லது ரூபா 700/- அல்லது ரூபா 200/- அல்லது ரூபா 175/- செலுத்தி ஒரு இந்தியன் கூறை சில்க் சாறியை விசேட பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம். இவ்விசேட பரிசுகள் வேலை நேரங்களில் "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

இந்த டிக்கெட்டுகள் யாவும், கூறைச் சேலை வழங்கப்பட்டதும், அதற்கு வேண்டிய குறியீடுகள் இடப்பட்டு, உரியவருக்குத் திருப்பித் தரப்படும்.

## தேசிய லொத்தர் சபை



## தீபாவளிப் பண்டிகையைச் சிறப்புடன் கொண்டாட

உயர்ந்த ரகமான

★ நைலக்ஸ் சேலைகள் ★ அக்கோபா சேலைகள்

★ 80 X 20 டெட்றோன் சேட்டுகள்

★ ஹெலோன் சூட்டிங் ★ கொட்லின்

★ சிறியவர்களின் சன்சூட்டுகள்

மற்றும்

சகல றெடிமேட் உடுப்புகளையும்

தெரிவு செய்ய

# "சீப்சைட்"

(வட இலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை.)

186; 188 கே. கே. எஸ். றோட் [போன்: 479] யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

